கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையில் நீதிபதி,
திருமங்கலம்.

2025-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 18ம் தேதி திங்கட்கிழமை

இடைநிலை மனு எண்.5/2025

இன்

அசல் வழக்கு எண்.180/2019

-----

1. பாண்டி
2. சரஸ்வதி
3. சுதந்திரா ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர்/

1. ஞானம்மாள் (இறப்பு)
2. விஜயலட்சுமி
3. சரோஜா
4. சுப்பையன்
5. அழகர்சாமி ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் திரு.G.அடைக்கலம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை

இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

இம்மனுவானது அசல் வழக்கு எண்.180/2019ல் விசாரணை செய்யப்பட்ட வா.சா.1ன் குறுக்கு விசாரணையை நீக்கரவு செய்தும், அசல் வழக்கு எண்.224/2024ஐ இந்நிர் அசல் வழக்கு எண்.180/2019 உடன் இணைத்து இவ்விரு வழக்கினையும் ஒன்றிணைந்த வழக்கு விசாரணையாக (Joint Trial) எடுத்துக்கொண்டு விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டப் பிரிவு 151–ன் கீழ் மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை** :–

மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

1.1) இம்மனுவானது அசல் வழக்கு எண்.180/2019ல் விசாரணை செய்யப்பட்ட வா.சா.1ன் குறுக்கு விசாரணையை நீக்கரவு செய்தும், அசல் வழக்கு எண்.224/2024ஐ இந்நிர் அசல் வழக்கு எண்.180/2019

உடன் இணைத்து இவ்விரு வழக்கினையும் ஒன்றிணைந்த வழக்கு விசாரணையாக (Joint Trial) எடுத்துக்கொண்டு விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவினை அனுமதிப்பதற்கு ஆட்சேபனை இல்லை என்று மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

<u>3) தீர்வு:—</u>

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

3.1) மனுதாரர்/வாதி தனது மனுவில், இந்நிர் அசல் வழக்கான 180/2019ஐ இந்நிர் மனுதாரர்/வாதி தரப்பில் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும், அசல் வழக்கு எண்.224/2024 வழக்கினை இந்நிர் மனுதாரர்கள்/வாதிகளுக்கு எதிராக இந்நிர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இரு வழக்குகளையும் தாக்கல்

செய்துள்ளதாகவும், இரண்டு வழக்குகளிலும் மனுதாரர்/வாதி தரப்பில் ஒரே சாட்சியங்களானது முன்னிலைப்படுத்தப்பட வாய்ப்பு உள்ளதாலும் இரண்டு வழக்குகளையும் ஒருசேர இணைத்து விசாரணை செய்யவேண்டும் என்று குறிப்பிட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2.2) இந்நிலையில், இம்மனுவினை அனுமதிப்பது குறித்து பரிசீலிக்கையில், இரண்டு வழக்குகளின் தரப்பினர்கள் மற்றும் வழக்கு சொத்துவிபரமும் ஏறக்குறைய ஒன்றாக உள்ள நிலையில் ஒன்றாக விசாரணை செய்வது சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** மனுதாரர்/வாதியின் இம்மனுவினை அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 18.08.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.18 17:13:30 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு:-**

1. **மனுதாரர்கள் தரப்பு சாட்சி** : இல்லை
2. **மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை
3. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி** : இல்லை
4. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.18 17:13:42 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

+

இடைநிலை மனு எண்.05/2025
இன்
அசல் வழக்கு எண்.180/2019
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 18.08.2025